<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 21.01.2026</td></tr>
<tr><td colspan="2">CC.No. 29/2024</td></tr>
<tr><td colspan="2">சாட்சி : PW1(Recall)</td></tr>
<tr><td>பெயர் : திரு. சின்னத்துரை</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு.பொன்னுச்சாமி</td><td>தொழில் : கொத்தனார்</td></tr>
<tr><td>கிராமம் : அனியாப்பூர்</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : 41/2026</td></tr>
<tr><td colspan="2">( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் )</td></tr>
</table>

---

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த போதுதான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எத்தனை வருடமாக கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன் என்றால் 20 வருடமாக பார்த்து வருகிறேன். கோயம்புத்தூருக்கு எந்த தேதியில் சென்றேன் என்றால் ஞாபகமில்லை. எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் எத்தனை மணி என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிக்கும், எனக்கும் இதற்கு முன்பாக பிரச்சனை இருந்ததா என்றால் தண்ணீர் பிரச்சனை இருந்து வந்தது. என் மீது வையம்பட்டி காவல்நிலையத்தில் எதிரி புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

2. சம்பவத்தன்று மருத்துவமனைக்கு எந்த வண்டியில் சென்றேன் என்றால் நான் மயக்கமாக இருந்ததால் எனக்கு ஞாபகமில்லை, எனது மனைவிக்கு தெரியும். எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் முன்பு இருந்தது, தற்போது இல்லை. நான் சொல்ல சொல்ல போலீசார் புகார் மனு தயார் செய்தார்கள். புகார் மனு தயார் செய்த காவலரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

3. நானும், ஆஜர் எதிரியும் ஒன்றாக இருந்து வருகிறோமா என்றால் இல்லை. நான் கிழக்கு தெரு வழியாக செல்வேன் என்றால் மேற்கு தெரு வழியாக செல்வேன். பொலிட்டி மாரியப்பன் என்பவர் நிலத்தின் வழியாக செல்லும் போது பாதை தகராறு ஏற்பட்டு அதில் என்னை இந்த வழியாக செல்லக்கூடாது என்று எச்சரித்து உள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும், ஆஜர் எதிரிக்கும் உரிமையில் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் இல்லை. 2019 ம் ஆண்டு எனது தம்பியின் மூக்கை நான் கடித்து அந்த புகாரின் பெயரில் நான் வையம்பட்டிக்கு காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் என்னுடன் இருக்கிறார்களா என்றால் தற்போது என்னுடன் 4, 5 வருடமாக இல்லை. 10 வருடமாக எனக்கும், எனது பெற்றோருக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

4. பிரச்சனை நடந்த இடம் எந்த இடம் என்றால் நான் குடியிருந்த இடம். சம்பவ சமயத்தில் யாருடைய வீட்டில் இருந்தேன் என்றால் முருகேசன் வீட்டில் இருந்தேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தது பரமசிவம் வீடு என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர்கள் எனக்கு 5 சென்ட், எதிரிக்கு 5 சென்ட் எழுதி கொடுத்தார்களா என்றால் ஆமாம். ஆஜர் எதிரி இருக்கும் வீட்டில் எனக்கு பங்கு வேண்டும் என்று நான் பிரச்சனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், எனக்கும் முன்விரோதம் இருப்பதால் பொய்யான புகார் கொடுத்து உரிமையியல் பிரச்சனை இருப்பதால் அதை மனதில் வைத்துக்கொண்டு எதிரி அதிகமாக படித்துள்ளார் என்ற காரணத்தினாலும், பொறாமை காரணத்தினால் இந்த பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எனக்கும், ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை சம்மந்தமாக பொய்யாக நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோன்று அந்த தேதியில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 21.01.2026 | |
| CC.No. 29/2024 | |
| சாட்சி : PW2(Recall) | |
| பெயர் : திருமதி.சராஜோ | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.சின்னத்துரை | தொழில் : வீட்டுகுடித்தனம் |
| கிராமம் : அனியாப்பூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 40/2026 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1.ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது கணவரின் தம்பி. எனது கணவர் எந்த தேதியில் கோயம்புத்தூர் வேலைக்கு சென்றார் என்றால் ஞாபகமில்லை. எந்ததேதியில் அங்கியிருந்து வந்தார் என்றால் 21.05.2023 அன்று வந்தார். என்னிடம் போன் உள்ளதா என்றால் சண்டையின் போது இல்லை, தற்போது வாங்கியுள்ளேன்.

2. எனது கணவருக்கும், ஆஜர் எதிரிக்கும் இதற்கு முன்பாக பிரச்சனை ஏதும் நடந்துள்ளதா என்றால் அப்படி எதுவும் நடக்கவில்லை. கடந்த 2019 ம் ஆண்டு எனது கணவர் ஆஜர் எதிரியின் மூக்கை கடித்து வையம்பட்டி காவல்நிலையத்தில் விசாரணைக்கு சென்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ தேதியன்று நான் எங்கு இருந்தேன் என்றால் எனது வீட்டில் இருந்தேன். சம்பவத்தை யார் எனக்கு தகவல் சொன்னது என்றால் தெருவில் இருந்த ஒரு பையன் ஓடிவந்து சொன்னார். அந்த பையன் எங்கள் ஊரை சேர்ந்தவரா என்றால் எனக்கு தெரியாது. அந்த பையனுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 6 ம் வகுப்பு படிப்பார். அன்று அந்த பையன் பள்ளிக்கு செல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. சம்பவ இடத்தில் என்னை தவிர வேறு யாராவது இருந்தார்களா என்றால் இருந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் தான் முன்விரோதம் காரணமாகவும், உரிமையியல் பிரச்சனை காரணமாகவும், படிக்கவில்லை என்பதாலும் மனத்தாழ்வுமின்மையால் வேண்டுமென்றே எதிரி வீட்டிற்கு சென்று எனது கணவர் தான் பிரச்சனை செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 21.01.2026 | |
| CC.No. 29/2024 | |
| சாட்சி : PW3(Recall) | |
| பெயர் : திரு.தங்கையா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.ஆறுமுகம் | தொழில் : பெயிண்டர் |
| கிராமம் : அனியாப்பூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 45/2026 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

------------------------------------------------------------

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1.எனக்கும், சின்னத்துரைக்கும் எப்படி பழக்கம் என்றால் அண்ணன், தம்பி உறவு முறை. நான் பெயிண்டர் வேலை பார்த்து வருகிறேன் என்றால் ஆமாம். அவர்கள் இருவருக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. சண்டை நடந்தது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரரும், அவரது மனைவியும் கேட்டுக்கொண்டதிற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கையெழுத்து கேட்டார்கள் நான் போட முடியாது என்று சொன்னேன்.அன்றைய தேதியில் நான் கையொப்பம் செய்தேன். என்ன எழுதியிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.